# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

### OS. No. 147/2019 நாள்.15.07.2025

DW1- திரு.வில்சன், த /பெ. திரு.மரியதாஸ்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

என்னுடைய கட்சிப்படி என் அப்பா வருமானம் குறைவு என்றும் சொத்தும் வாங்கும் அளவுக்கு இல்லை என்றம் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். குடும்ப நடத்துவதற்கே சிரமபட்டதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். எந்த தேதியில் என் அம்மா பெயரில் வாங்கபட்டது என்றால் 1982 இல் வாங்கபட்டது. பிளாட்டை நான்தான் வாங்கினேன் என்று சொல்லுகிறேனா என்றால் இல்லை அந்த கடனை நான்தான் வேலைக்கு போய் அடைத்தேன். பிளாட் வாங்கும்போது எனக்கு 16வயது என்றால் ஆமாம். அம்மா எப்போது வீடு கட்டினார் என்றால் அம்மா கட்டவில்லை அப்பாதான் 1983 இல் கட்டினார். யாரிடம் பிளாட் வாங்குவதற்குகடன் வாங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. வீடு கட்ட அப்பா கடன் வாங்கிதான் கட்டினாரா என்றால் ஆமாம். வீடு கட்ட யாரிடம் கடன் வாங்கினார் என்றால் உறவினரிடம் வாங்கினார். நான் என்னுடைய எதிர்வழக்குரையில் பிளாட் வாங்கியது, வீடு கட்டியது நான் வெளிநாட்டில் போய் சம்பாதித்தது என்று சொல்லபட்டது என்றால் ஆமாம். நான் வேலைக்கு போவதற்கு 15, 20வருடத்திற்கு முன்பாகவே பிளாட் வாங்கபட்டது என்றும் வீடு கட்டபட்டது என்றும் சொன்னால் சாட்சி எதுவும் பதில் சொல்லவில்லை. அம்மா எதுவும் கடன் வங்கியில் வாங்கினாரா என்றால் தொழிலுக்காக வாங்கினார். லோனை அம்மா அடைத்தாரா என்றால் இல்லை. எப்ப எங்கு லோன் வாங்கபட்டது என்றால் 2002 கருந்தட்டான்குடி, கூட்டுறவு சங்கம். அப்போது நான் எங்கிருந்தேன் என்றால் வெளிநாட்டில் இருந்தேன். அம்மா அந்த பணத்தை எதற்கு பயன்படுத்தினார் என்று எனக்க நேரடியாக தெரியாது என்றால் தெரியும். எதற்கு பயன்படுத்தினார் என்றால் கடையில் தொழில் நடத்துவதற்கு விரிவாக்கம் செய்தார். நான் என் எதிர்வழக்குரையில் மேற்படி கடன் வீட்டிற்காக வாங்கபட்டது என்றும் அதைநான்தான் அடைத்தேன் என்றும் சொல்லியுள்ளேனே அது சரியா என்றால் ஆமாம். வீடு கட்டுவதற்கு என்று சொல்லுகிறனே, தொழிலுக்கு என்று சொல்லுகிறனே இது இரண்டில் எது சரி என்றால் தொழில் செய்வதற்குதான் கடன் வாங்கினார். நான் எதிர்வழக்குரையில் மனையும், வீடும் வெளிநாட்டு சாம்பாத்தியத்தில் வாங்கபட்டதாக சொல்லியுள்ளேன் அதற்கு மாறுபட்டு தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. லோன் நான்தான் அடைத்தேன் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் அவைகளை தாக்கல் செய்துள்ளேன். மொத்தமாக கட்டி அடைத்தேனா, மாதம்மாதம் கட்டினேனா என்றால் மாதம்மாதம் கட்டினேன். பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தின்படி எனது அப்பாவின் 1991இல் சம்பளம் 1947 என்றும் அதில் பிடித்தம் போக மீதி 482 என்றால் 482 ரூபாய் பிடித்தம். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் லோன் வாங்கும் formஇல் அம்மா பெயரில்தான் உள்ளது என்றால் ஆமாம். எவ்வளவு கடன் அதில் வாங்கியுள்ளார் என்றால் ரூ.75,000. இந்த சொத்து அவர்களுக்கு சொந்தம் என்று காண்பித்து கடன் கொடுக்கபட்டதாக படிவத்தில் உள்ளது என்றால் ஆமாம். இந்த படிவத்தை பூர்த்தி செய்து கடன் கேட்டு கொடுப்போம் என்றால் ஆமாம். அந்த படிவம் எப்படி என்னிடம் வந்தது என்றால் எனக்கு தெரியாது அம்மா கொடுத்தார். பி.வா.சா.ஆ.2 லோன் யார் பெயரில் உள்ளது என்றால் அம்மா பெயரில் உள்ளது. இதை தீர்த்து வரைவு ரசீது பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 வரவு ரசீது அம்மா பெயரிலும் அப்பா பெயரிலும் என்றால் தெரியவில்லை. என்ன காரணத்திற்காக பி.வா.சா.ஆ.1 தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடனை நான்

என்னுடைய கணக்கிலிருந்து அடைத்தேன் என்பதை காண்பிக்க. அவ்வாறு ஏதேனும் அதில் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் என் அம்மா அடமானம் வைத்து ரூ.75,000 கடன் வாங்கியதாக உள்ளது என்றும் அதில் வாசகத்தில் நான் வாங்கிய கடனுக்கு அடமான வைத்து கொடுப்பது போல் உள்ளது என்றால் அது நான் இல்லை சின்ன மகன். அந்த கடன் என் தம்பிக்கு வாங்கியதா என்றால் ஆமாம். தம்பிக்கு வியாபாரத்திற்கு வாங்கிய கடன் பத்திரத்தை சொத்து வழக்கில் எதற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அந்த கடனை நான் அடைத்ததை காண்பிக்க. இந்த பத்திரத்தில் நான் கடன் அடைத்தது போல் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. தனியாக கடன் அடைத்ததை காண்பிக்க ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.4 பெந்தக கடன் என் அம்மா அடைத்து தீர்த்ததுபோல் ரசீதில் உள்ளது என்றால் ஆமாம். அம்மா வாங்கிய கடனை அவரே குடும்பத்திற்காக வாங்கி அவரே தீர்த்துவிட்டார் என்றும் நான் பணம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வீடு எப்போது கட்டபட்டது என்றால் 1991 இல் ஆரம்பித்து 1993இல் முடிந்தது. தற்போது என் தம்பிக்கு வயது என்ன என்றால் 52. தம்பிக்கு பிஸ்னஸ் கடன் வாங்கியது என்று சொல்லுயுள்ளேனே என்ன கடன் என்றால் ஜெராக்ஸ் மிசின் வாங்குவதற்காக. வழக்கறிஞர் அறிவிப்பு வாதி சகோதரி பங்கு அனுப்பினார் என்றால் ஆமாம். ஆனால் அதற்கு தற்போது சொல்லும் விஷயங்களை சொல்லி மறுப்பு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் ஆமாம். என்ன காரணம் என்றால் போதுமான விபரம் தெரியவில்லை. தாவா சொத்து அம்மாவின் தனிபட்ட சுயாஜ்ய சொத்து என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 முதல் 5 முறையான ஆவணங்கள் இவ்வழக்கில் தற்போது சாட்சி அளிக்க வாங்கபட்டது என்றால் அசல் என்னிடம் உள்ளது அதை பார்த்து நகல் வாங்கினேன். வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபோது அசல் என்னிடம் இல்லையா, அதற்கு பிறகு அம்மாவிடம் இருந்து எடுத்து கொண்டேனா என்றால் அம்மா என்னிடம் கொடுத்து சென்றார். அம்மா இறந்தபிறகுதான் வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் ஆமாம். மேற்படி ஆவணம் என்னிடம் அசலாக இருந்தநிலையில் ஏன் பதில் கொடுக்கவில்லை என்றால் எனக்கு போதியவிபரம் தெரியவில்லை. மேற்படி சொத்து அம்மா சொத்து என்றும் சகோதரசகோதரிகளுக்கு பங்கு உண்டு என்பதை ஏற்றுதான் பதில் கொடுக்கவில்லை. வழக்கிற்காக அப்படி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் எந்த குடும்ப உறுப்பினருக்கும் நான் வங்கி கணக்கில் நான் அனுப்பவில்லை என்றால் அப்பாவுக்கு அனுப்பியுள்ளேன். வாதி கோரியபடி பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.